எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின் - (அறம்) - 666

# திருக்குறள் தேர்வு 2022 - 2023

*பாலர் வகுப்பு முதல் முதுகலை வகுப்பு வரை*

தமிழகத்திலுள்ள தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை, (மெட்ரிக்குலேசன்) பதின்மப் பள்ளிகள், கல்லூரிகளின், மதிப்பிற்குரிய தாளாளர், முதல்வர் மற்றும் தலைமையாசிரியர்கள், தமிழ்ப் பேராசிரியர்களுக்கு

## வேண்டுகோள்!

**சால்புடையீர், வணக்கம்!**

உலகம் புகழ உயர்வுற உயர்ந்த தமிழென்னும் அமுதத் தனி மொழியைச் சங்கம் வைத்துப் பாதுகாத்த தென்பாண்டி நாட்டின் தலைநகரான மதுரை மாநகரில் 45 ஆண்டுகளாக மதுரை மாவட்டத் திருக்குறள் பேரவை தமிழ் மாமுனிவர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கிய உலகத் திருக்குறள் பேரவையோடு இணைத்துத் திருக்குறளையும், செந்தமிழையும் பலவகையிலும் பரப்பி வருகிறது. மதுரையைத் தலைமையகமாகக் கொண்டு உலகத் திருக்குறள் பேரவை அறக்கட்டளையை நிறுவி முறைப்படுத்தி வருகிறது. இது ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பு.

## மாணவர் நலங்காக்கும் திருக்குறள் போட்டித் தேர்வு

இக்கால மாணவ, மாணவியரே இந்நாட்டின் வருங்காலப் பெருமக்கள். ஆதலால் படிக்கும் சிறுவர், சிறுமியர்க்கு மனதில் திருக்குறள் கருத்துப் பதிய, அவர்கள் வாழ்க்கை மலர, ஒரு புதிய, எளிய முறையில் திருக்குறளைப் பரப்ப திட்டமிட்டுக் கடந்த நாற்பத்தொரு ஆண்டுகளாகத் திருக்குறள் தேர்வினைப் புதிய முறையில் நடத்தி வருகிறோம்.

இக்காலப் பிஞ்சு உள்ளங்களில் நல்லொழுக்கமும், இறையுணர்வும், நினைவாற்றலும் வளர இத்திருக்குறள் தேர்வு உதவி வருவதைப் பாராட்டி அனைத்து ஆசிரியர் பெருமக்களும் மடல்கள் எழுதியும், தொலைபேசி வாயிலாக எங்களை ஊக்கப்படுத்தியும் வருவது எங்கள் முயற்சிக்கு உரம் வைத்தாற்போன்றுள்ளது. எனவே, அருள்கூர்ந்து இத்திட்டம் நிறைவேறத் தாங்கள் தங்கள் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் அனைவரையும் திருக்குறள் தேர்வில் கலந்து கொள்ளச் செய்ய அன்புடன் வேண்டுகிறோம்.

திருக்குறள் தேர்வில் பெற்றி பெற்றவர்களுக்கத் தகுதிக்கேற்ப வேலை வாய்ப்பிடங்களில் முன்னுரிமை தருவதற்கும், தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளி கல்லூரிகளுக்கும் திருக்குறள் தேர்வு எழுதுவதற்கும் ஆணையிட வேண்டும் என்ற எங்கள் வேண்டுகோளை ஏற்றுத் தமிழக அரசு தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளி கல்லூரிகளும் திருக்குறள் தேர்வில் கலந்து கொள்ள வேண்டுமென்று, மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்களும், மேலும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களும், பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களும், பதின்மப்



பள்ளிகளின் இயக்குநர் அவர்களும், தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களும், ஒவ்வொரு ஆண்டும் அனுமதி அளித்தும் திருக்குறள் தேர்வு எழுதுவதற்கு ஆணையிட்டும் வருகிறார்கள் மற்றும் மதுரை மாவட்ட கிறிஸ்தவ பேராயர்களும் சென்னை மாவட்ட தமிழ்நாடு கத்தோலிக்க கல்வி அமைப்பு சார்பாகவும் தம் தலைமையின் கீழ் உள்ள அனைத்து ஆர்.சி. பள்ளிகளுக்கும் ஆணை பிறப்பித்து உள்ளனர். மேலும் தமிழகத்தில் உள்ள மறை மாநிலப் பேராயர்களும் திருக்குறள் தேர்வு எழுதப் பரிந்துரையும் செய்துள்ளார்கள். மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களும் மாநகராட்சிப் பள்ளிகள் அனைத்தும் கலந்து கொள்ள வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்கள்.

## பரிசுகள் விபரம்

திருக்குறள் தேர்வில் கலந்து கொள்ளும் தமிழ் மற்றும் ஆங்கில வழிப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் மாநில பரிசுகள், மாவட்டப் பரிசுகள், ஊக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

### மாநிலப் பரிசுகள்

| | |
|---|---|
| முதற்பரிசு | வெண் பொற்பதக்கமும் கேடயமும், சிறப்பு சான்றிதழ்களும் |
| இரண்டாம் பரிசு | பொன்னுறையிட்ட கேடயமும், சிறப்பு சான்றிதழ்களும் |
| மூன்றாம் பரிசு | திருவள்ளுவர் உருவம் பொறித்த கேடயம், சிறப்பு சான்றிதழ்களும் |
| சிறப்பு பரிசு | சுவர்க்கடிகாரம் (அதிக அளவில் மாணவர்கள் கலந்து கொண்ட பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கு மட்டும்) |

**மாவட்டப் பரிசுகள், ஊக்கப்பரிசுகள்** சிறந்த நூல்கள் வகுப்பு வாரியாக வழங்கப்படும். (பரிசுகள் மாறுதலுக்குரியது)

திருக்குறள் தேர்வில் அனைத்து மாணவர்களையும் தொடர்ந்து கலந்து கொள்ளச் செய்யும் பள்ளி, கல்லூரிகளுக்கும் திருக்குறள் விருதும் பதக்கமும் சிறப்புப் பரிசுகள் ஆண்டுதோறும் வழங்கி வருகிறோம். விழாவில் பரிசுகள் பெற இயலாத வெளியூர் பள்ளி கல்லூரிகளுக்கும் பரிசுகள் கொரியரில் அனுப்பப்படும். **2023ல் தேர்வு எழுதி மாநிலப் பரிசு பெறுகிறவர்களுக்கு 2024 மார்ச்சு திங்களில் நடைபெறவிருக்கும் மதுரை மாவட்ட உலகத் திருக்குறள் பேரவை மாநாட்டில் பரிசுகளும், பதக்கங்களும், கேடயங்களும் வழங்கப் பெறும்.**

## தேர்வு முறை

1. 40ம், 40க்கு மேலும் மதிப்பெண் பெற்று வெற்றி பெற்ற அனைத்து மாணவ, மாணவியர்க்கும் தகுதி வாரியாக சான்றிதழ்கள் வழங்கி வருகிறோம்.
2. பாலர் வகுப்பு (L.K.G., U.K.G.) ஒன்று முதல் மூன்று வகுப்புகளுக்கு ஒப்பித்தல் போட்டிகள் அந்தப் பள்ளியிலேயே நடைபெறும். மதுரை நகரில் மட்டும் 100 மாணவர்களுக்கு மேலாக உள்ள பள்ளிகளுக்கு பேரவையின் சார்பாளர்கள் அப்போட்டித் தேர்வுகளை நடத்துவார்கள்.
3. வெளியூரில் உள்ள பள்ளிகளில் ஒப்புவித்தல் போட்டியை மாற்று ஆசிரியர்களைக் கொண்டு நடத்திட வேண்டும்.
4. 4-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை தேர்வில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு

மாணவர்க்கும் பேரவையின் வினாக்களுடன் கூடிய விடைத்தாள்கள் வழங்குவர். அவ்விடைத் தாள்களிலேயே அவ்வினாக்களுக்கு உரிய விடைகளைப் பேரவையினர் வழங்கிய திருக்குறள் பாடத்திட்ட நூலின் அடிப்படையில் விடை எழுத வேண்டும்.

5. 9-ம் வகுப்பு முதல், உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி, பதின்மப் பள்ளி (Matric) கல்லூரி மாணவர்களுக்கு தனியாகக் கட்டுரை வினாக்களும், குறுவினா, நெடுவினா, இலக்கணவினா, பொருள் விளக்கம் முதலியன மாணவர் வகுப்புக்கேற்ப கேட்கப்பெறும்.

6. மாதிரி வினாத்தாள் திருக்குறள் பேரவையினர் வழங்கும் திருக்குறள் பாட நூல்களுடன் அனுப்பப்படும்.

7. முதுகலை வகுப்புப் பயிலும் மாணவர்களுக்குத் திருக்குறள் முழுமையாகப் பரிமேலழகர் உரை மற்றும் சிந்தனை உரை உட்பட கட்டுரை வினாக்களாகக் கேட்கப்பெறும்.

8. உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி, பதின்ம மற்றும் கல்லூரி, முதுகலை மாணவர்கள் **தேர்வு எழுதத் தனியாக முழுநீள வெள்ளைத் தாள்கள் கொண்டு வருதல் வேண்டும்.**

9. கட்டணம் செலுத்திப் பதிவு பெற்ற மாணவரே தேர்வு எழுதலாம்.

தேர்வுக் கட்டணத்தை வரைவோலை / D.D. அல்லது பணவிடை அல்லது நேரில் அலுவலகத்தில் செலுத்தும்போது மொத்த தொகையில் தேர்வுச் செலவுக்காக 10% பிடித்துக் கொண்டு மீதித் தொகை முழுவதும் கொடுத்து ஏற்புச் சீட்டுப் பெற்றுக் கொள்ளவும். வரைவோலை/D.D. **செ. திருமாவளவன் (S. THIRUMAVALAVAN)** என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புதல் வேண்டும். வரைவோலை (D.D.) மதுரை நகரில் உள்ள அரசுடமை வங்கியில் மாற்றத்தக்கதாக இருத்தல் வேண்டும். மதுரையில் இல்லாத வங்கியானால் அதற்குரிய கழிவினைப் பள்ளி, கல்லூரியே பேரவைக்குச் செலுத்த வேண்டும். வெளியூரிலுள்ள பள்ளிகளுக்குத் தேர்வுக் கட்டணம் கிடைத்த 10 நாட்களில் பாட நூல்கள் (Professional) கொரியர் மூலம் அனுப்பி வைக்கப் பெறும்.

பள்ளி, கல்லூரிகளின் முகவரிகளைத் தெளிவாக மாவட்டம், அஞ்சல் எண்களையும் (Pin Code), தொலைபேசி எண்களையும் அவசியம் குறிப்பிட வேண்டுகிறோம்.

**பள்ளி, கல்லூரிகளும், பதின்மப் (Matric) பள்ளிகளும் மாணவர் பெயர்களைத் தமிழில் மட்டும் எழுத வேண்டுகிறோம். (ஏனெனில் சான்றிதழ்கள் எழுத வாய்ப்பாக இருக்கும்)**

மேற்குறித்த விபரங்களில் யாதேனும் ஐயம் உண்டானால் செயலர் முகவரிக்குப் போதுமான அஞ்சல் தலையுடன் எழுத வேண்டுகிறோம். தேர்வு தொடர்பான கடிதப் போக்குவரத்துகள் யாவும் தமிழிலேயே நடைபெறும். மேலும் விபரங்களை அறிய 0452 -2386238



**தேர்வுக் கட்டண விபரம் : அட்டவணையில் காண்க**

(பாடநூல்களுக்கும் சேர்த்தே தேர்வுக் கட்டணம் பெறப்படுகிறது)

தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டிய இறுதி நாள் : **31/10/2022 திங்கள்கிழமை**

எல்லா மாணவர்கட்கும் சேர்த்து ஒவ்வொரு பள்ளியிலும், கல்லூரியிலும் உருபா 50 தண்டத்துடன் செலுத்த வேண்டிய இறுதி நாள் **15/11/2022 செவ்வாய்கிழமை**

## தேர்வு நடைபெறும் நாள்

தமிழ்வழித் தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகள் தேர்வு நாள் : **10.01.2023 செவ்வாய்க்கிழமை**

ஆங்கிலவழிப் பதின்மப் பள்ளிகள், கல்லூரிகளின் தேர்வு நாள் : **27/01/2023 வெள்ளிக்கிழமை**

தேர்வுக் கட்டணமும், பெயர்ப்பட்டியலும் அனுப்ப வேண்டிய முகவரி :

**அ.கி.செ. திருமாவளவன்**

தேர்வுச் செயலர், 55, டி.எஸ்.பி.நகர், 2வது தெரு,
புறவழிச்சாலை, மதுரை - 625 010.

**நேரடியாக வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் விபரம்**

**IFSC CODE : IOBA0000314**

**A/c No. : 031401000028019**

**Name : S. THIRUMAVALAVAN,**
**INDIAN OVERSEAS BANK,**
**(North Vadambokki Street,, Madurai-1.)**
**Cell : 94433 80087**

## பாடத்திட்டம் - தேர்வு முறை - தேர்வுக் கட்டணம்

(திருக்குறட் பாட நூல்களுக்கும் சேர்த்தே தேர்வுக் கட்டணம் பெறப்படுகிறது)

| வகுப்பு | அதிகாரம் | குறட்பாக்கள் எண்ணம் | உரை | போட்டி முறை | தமிழகத்தில் தேர்வு கட்டணம் |
|---|---|---|---|---|---|
| பாலர் - 1 Pre KG LKG | கடவுள் வாழ்த்து | 10 | | ஒப்பித்தல் மட்டும் | ரூ. 30.00 |
| பாலர் - 2 UKG | கடவுள் வாழ்த்து | 10 | | ஒப்பித்தலுடன் திருக்குறள் திருவள்ளுவர் வேறு பெயர்களும் கேட்டல் | ரூ. 30.00 |
| 1. | கடவுள் வாழ்த்து | 10 | கருத்து | ஒப்பித்தல் | ரூ. 30.00 |
| 2. | 1, 2 அதிகாரங்கள் | 20 | கருத்துரை | ஒப்பித்தல் | ரூ. 30.00 |
| 3. | 1, 2, 3 அதிகாரங்கள் | 30 | கருத்துரை | ஒப்பித்தல் | ரூ. 30.00 |

| வகுப்பு | அதிகாரம் | குறட்பாக்கள் எண்ணம் | உரை | போட்டி முறை | தமிழகத்தில் தேர்வு கட்டணம் |
|---|---|---|---|---|---|
| | | | **அறத்துப்பால்** | | |
| 4. | முதல் 4 அதிகாரங்கள் | 40 | பொழிப்புரை | எழுத்துத் தேர்வு | ரூ. 40.00 |
| 5. | 8, 9, 10, 42, 43, 60 | 60 | (4 முதல் 8 வரை வினாத்தாளிலேயே விடை எழுதவும்) | | ரூ. 40.00 |
| 6. | 11, 12, 13, 14, 40,16, 17, 18 | 80 | ....... | ....... | ரூ. 40.00 |
| 7 | 19 முதல் 27 வரை | 90 | ....... | ....... | ரூ. 40.00 |
| 8 | 28 முதல் 38 வரை | 110 | ....... | ....... | ரூ. 40.00 |
| | | | **பொருட்பால்** | | |
| 9. | 39 முதல் 50 வரை | 120 | எழுத்துத் தேர்வு (எழுத்துத் தேர்வு முழு நீள வெள்ளைத்தாளில் விடை எழுதவும் மாணவர்களே தாள் கொண்டு வர வேண்டும்) | | ரூ. 40.00 |
| 10. | 51 முதல் 63 வரை | 130 | | | ரூ. 40.00 |
| 11. | 64 முதல் 77 வரை | 140 | ....... | ....... | ரூ. 40.00 |
| 12. | 78 முதல் 92 வரை | 150 | ....... | ....... | ரூ. 40.00 |

குறிப்பு : Pre KG முதல் 12-ஆம் வகுப்பு வரை அச்சிடப்பட்ட திருக்குறள் தேர்வுப் புத்தகம் அலுவலகத்தில் வழங்கப்படும். வெளியூர்களுக்கு கூரியரில் அனுப்பி வைக்கப்படும்.

## கல்லூரிகளுக்கான பாடத்திட்டமும் தேர்வு முறையும் - கட்டண விபரமும்

இடைநிலை ஆசிரியர் பயிற்சி பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம்., பி.பி.ஏ., பி.லிட்., புலவர்., பி.எட் முதலிய பட்டப்படிப்பும், பட்டயப்படிப்பும்

| வகுப்பு | அதிகாரம் | குறட்பாக்கள் எண்ணம் | உரை | போட்டி முறை | தமிழகத்தில் தேர்வுக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| இளங்கலை, B.Com., B.Ed., முதல் ஆண்டு | 55 ஆம் அதிகாரம் முதல் 69ஆம் அதிகாரம் வரை | 150 | பொழிப்புரை | எழுத்துத் தேர்வு | ரூ. 50.00 |
| இளங்கலை, B.Com., B.Ed., 2ம் ஆண்டு | 70 ஆம் அதிகாரம் முதல் 88ஆம் அதிகாரம் வரை | 190 | (அச்சிடப்பட்ட திருக்குறள் தேர்வுப் புத்தகங்கள் அலுவலகத்தில் நேரில் வழங்கப்படும். வெளியூர்களுக்கு கூரியரில் அனுப்பி வைக்கப்படும்) | | ரூ. 50.00 |
| இளங்கலை, B.Com., 3ம் ஆண்டு | 89 ஆம் அதிகாரம் முதல் 106ஆம் அதிகாரம் வரை | 180 | | | ரூ. 50.00 |



**முதுகலைப் படிப்பு**

முதுகலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு திருக்குறள் தேர்வுப் புத்தகங்கள் வழங்கப்படமாட்டாது. (முப்பால் ஆய்வுத் தொகுப்பு நூல் ஒன்று வழங்கப்படும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதுகலை, எம்.ஏ., எம்.எஸ்.சி., எம்.பி.ஏ., எம்.பில்., பி.எச்.டி., உள்பட முதலாம் ஆண்டு | திருக்குறளில் அறத்துப்பால் பொருட்பால் முழுமையும் | 1080 குறட் பாக்கள் | பரிமேல் அழகர் உரை மற்றும் புதிய சிந்தனை உரைகள் | எழுத்துத் தேர்வு சிந்தனை வினாக்களுடன் கூடிய கட்டுரை வினாக்கள் | ரூ. 60.00 |
| இரண்டாம் ஆண்டு | அறத்துப்பால், பொருட்பால் காமத்துப்பால் முழுமையும் | 1330 குறட் பாக்கள் | ,, | ,, | ரூ. 60.00 |

அலுவலகம் : 0452 - 2386238
அலைபேசி : 94433 80087

## முக்கிய குறிப்பு

**தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டிய கடைசி நாள் :**

**31.10.2022 திங்கள் கிழமை**

**15.11.2022 செவ்வாய்கிழமை** (with fine Rs. 50/-)

**தேர்வு நடைபெறும் நாள் :**

தமிழ் வழிப் பள்ளிகளுக்கு (Regular) - **10.01.2023 செவ்வாய்கிழமை**

ஆங்கில வழிப் பதின்மப் பள்ளிகள் (மெட்ரிக்) மற்றும் அனைத்துக் கல்லூரிகளுக்கும் - **27.01.2023 வெள்ளிக்கிழமை**

1. கட்டணம் கிடைத்த 10 நாள்களில், திருக்குறள் பாடநூல்கள் வகுப்பு வாரியாக (Professional) கொரியர் மூலம் அனுப்பி வைக்கப்பெறும்.
2. மதுரை மாவட்டத்தில் தேர்வு மையம் வைத்துத் திருக்குறள் விடைத்தாள்கள் திருத்தம் செய்யப்பெறும்.
3. திருக்குறள் தேர்வுத்தாள் திருத்தும் ஆசிரியர்களுக்கு மதிப்பூதியம் பணமாக வழங்கப்பெறும்.
4. தேர்வுக் கட்டணம் அனுப்பும் போது தங்கள் பள்ளி, கல்லூரியின் திருக்குறள் தேர்வுச் செலவுக்கென 10% கழிவை பிடித்தம் செய்தது போக எஞ்சிய தொகை முழுவதையும் நேரில் ரொக்கமாகவோ அல்லது (DD) பணவிடை ஆகவோ அல்லது வங்கிக் கணக்கில் நேரடியாகவோ செலுத்தலாம்.
5. பிற விபரங்கள் தேர்வு அறிக்கையிலும் தேர்வு விதிகளிலும் காண்க.
7. டி.டி. எடுத்து அனுப்பும் பொழுது S. THIRUMAVALAVAN என்ற பெயரில் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**தேர்வுக் கட்டணமும், பெயர்ப் பட்டியலும் அனுப்ப வேண்டிய முகவரி :**

அ.கி.செ.திருமாவளவன், தேர்வுச் செயலர்,
55, டி.எஸ்.பி. நகர், 2வது தெரு, புறவழிச்சாலை, மதுரை - 625 010.

# திருக்குறள் பேரவை

## மதுரை – 625 010.

## திருக்குறள் பேரவையின் செயல்முறைத்திட்டங்கள்

### திருக்குறள் பேரவையின் நோக்கம் :

மனிதனின் மனக்கோட்டத்தையும், குறைகளையும் நீக்கும் தலைசிறந்த நூல் திருக்குறள். அது ஒரு முழுமை நூல், வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளையும், தழுவி வளர்க்கும் வாழ்க்கை நூல், சமுதாய ஒப்புரவு காட்டும் உயர்நூல், ஒரு தனி மனிதனின் வளர்ச்சியில் மாணவப் பருவம் முதல் பருவங்கள் தோறும் துணை நின்று படிப்படியாக வளர்த்து வழிநடத்தும் அருமறை, பொதுமறை, மனிதனை வாழ்வாங்கு வாழச் செய்வதால் திருக்குறள் ஒரு புதுமறையாக விளங்குகிறது.

திருக்குறள் தமிழிலேயே தோன்றி இருந்தும் தமிழர்களின் வாழ்வில் திருக்குறள் வழியாக வாழ்வியல் இன்றுவரை அமையவில்லை. திருக்குறள் காட்டும் சமுதாய அமைப்பில் உயர்வு தாழ்வு இல்லை. ஆயினும் இன்றைய தமிழகத்தின் ஏன் உலகிலும் கூட வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் தடுமாற்றங்கள், கேடுகள் நிறைந்துள்ளன.

நெருநலும், கொன்றது போலும் நிரப்பு என்று திருவள்ளுவர் வருந்தி கோடிட்டுக்காட்டிய வறுமை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. ஏன் ? அன்பினால் இணைக்கப்பெற்று ஒற்றுமை உணர்வுடன் வாழ வேண்டிய மனிதகுலம் உட்பகையால் உணர்வு அழிந்து வருகிறது. இந்த அழிவினை தடுத்து நிறுத்தி ஆக்கத்தின் வழிநடத்ததற்குரிய ஒரே வழி திருக்குறள் நெறியை வாழ்வியல் சட்டமாக ஏற்றுக் கொள்வதுதான்.

திருக்குறள் பேரவையின் முதல் நோக்கம் திருக்குறளை முழுதாகக் கற்று தெளிதல் தான். இதனை இளமை முதல் பயிற்றுவித்து வாழ்க்கையின் அனைத்துச் சிக்கல்களுக்கும் தீர்வு காண்பது என்பது தான் திருக்குறள் பேரவையின் குறிக்கோள். அதனை அடிப்படையாகக் கொண்டு 12 அம்சத் திட்டங்களைச் செயல்படுத்த பேரவை உறுதி கொண்டுள்ளது.

உலகத் திருக்குறள் பேரவை 2-ஆவது மாநில மாநாடு 12, 13.3.2005-இல் சனி, ஞாயிறு ஆகிய இரு நாள்களிலும் தவத்திரு. குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர். M.கற்பக விநாயகம் அவர்கள் மற்றும் தமிழகத்தில் உள்ள பல்வேறு தமிழறிஞர்களும், அமெரிக்கா, இலண்டன், மலேசியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உள்ள தமிழறிஞர்களும், கலந்து சிறப்பித்தனர்.

இங்கிலாந்திலுள்ள அவான் ஆற்றங்கரையில் உலகப்புகழ் சேக்ஸ்பியருக்கு நினைவகம் அமைத்தாற்போல திருக்குறள் அரங்கேறிய மதுரை மாநகரில் வைகை ஆற்றங்கரையில் பொது மக்களும், மாணவர்களும் வழங்கும் பணத்தின் மூலம் திருவள்ளுவருக்கு நினைவகம் அமைக்க முயன்று வருகின்றோம்.



உலகத் திருக்குறள் பேரவையின் இணைப் பொதுச் செயலாளர், திருக்குறள் மணி அ.கி.செல்வக்கணபதி அவர்களின் வேண்டுகோளின் படி தமிழக முதலமைச்சர் அவர்கள் மதுரை வைகை ஆற்றங்கரையில் திருவள்ளுவருக்கு 133 அறைகள் கொண்ட நினைவு மாளிகை எழுப்ப 5 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான இடத்தை உலகத் திருக்குறள் பேரவைக்கு வழங்க மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிட்டுள்ளார்கள். ஆணை எண், ந.க.எண் : 3777/தமிழ் / 1/2005, நாள் - 17.5.2005 அந்த 5 ஏக்கர் நிலம் மதுரை திருப்பரங்குன்றம்சாலை யில் சர்வே எண் : 385 1A, 1A, 1Aa எண்ணுள்ள புன்செய் தரிசு நிலத்தில் 5 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆணையை எதிர்நோக்கி உள்ளோம். விரைவில் அம்மாளிகை உருவாக்கப்பட இருக்கிறது. அம்மாளிகை விரைவில் சுற்றுலா மையமாகவும், திருக்குறள் தேர்வு எழுதும் பள்ளி, கல்லூரிகளின் ஆசிரியர்களும், மாணவர்களும் இலவசமாகத் தங்குவதற்கு ஒரு பகுதியை உருவாக்கவும் இருக்கிறோம்.

### திருக்குறள் பேரவையின் செயல்முறைத் திட்டங்கள் :

1. திருவள்ளுவர் காட்டும் தனக்குவமை இல்லாதான் தாள்களைத் தொழுவதற்கு வழிவகை செய்தல்.
2. பாலர் வகுப்பு முதல் பல்கலை வகுப்பு வரை முழுமையாகத் தேர்வு நடத்தி பரிசுகள் வழங்குதல்.
3. திருக்குறள் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு தகுதிக்கேற்ப அரசு, தனியார் துறைகளின் வேலைவாய்ப்பினை வழங்க உதவுதல்.
4. வாழ்க்கைச் சிக்கல்களுக்குத் தீர்வு காணத் திருக்குறள் சிந்தனைச் சுழல்களை அமைத்தல்
5. படித்துப் பணியின்றி வேலைவாய்ப்பினை நாடியோர்க்கு உதவுதல்.
6. உலகத் திருக்குறள் நெறி மையத்தை பல்கலைக் கழகங்களோடு இணைத்து ஒரு புதிய சமுதாயத்தைக் காண உழைத்தல்.
7. ஒரு மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூரைத் தத்தெடுத்து அவ்வூரை பல்வேறு துறைகளில் மக்கள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்து உதவுதல்.
8. செய்க பொருளை என்ற வள்ளுவரின் தத்துவத்தை நடைமுறைக்குக் கொண்டுவருதல்.
9. நீதிபதிகள், தொழில் அதிபர்கள், கல்வித்துறையினர், அரசுத்துறையினர் போன்ற 38 அமைப்புகள் அமைப்பது, ஒவ்வொரு அமைப்பிற்கும் 35 உறுப்பினர்களை அமைத்து அரசுடன் தொடர்பு கொண்டு ஒரு புதிய சமுதாயத்தைக் காண உழைத்தல்.
10. மதுரை நகர், தொடக்க, நடுநிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பேரவையின் கிளைகளை அமைத்து திருக்குறளின் சிந்தனைச் சுழல்களை உருவாக்குதல்.

திருவள்ளுவரைப் போற்றுவோம் !



திருக்குறளைப் உலகெங்கும் பரப்புவோம் !!

## தேர்வுக் கட்டணம் ஏன்?

1. மதுரை மாவட்ட திருக்குறள் பேரவை நடத்தும் திருக்குறள் தேர்வு ஒரு சேவை நோக்கோடு செயல்பட கூடிய இலாப நோக்கமற்ற அமைப்பு ஆகும்.
2. ஒவ்வொரு மாணவனுக்கும் தனித்தனியாக LKG முதல் M.A., வரை அவரவர் பாடத்திட்டத்தினை திருக்குறள் நூலாக அச்சிட்டு வழங்கப்படுகிறது.
3. இதற்கான அச்சுச் செலவு, அலுவலகச் செலவு, பணியாளர்களின் மதிப்பூதியம், மின்சாரச் செலவு தொலைபேசிக் கட்டணம் போன்றவை தேர்வுக் கட்டணத்திலிருந்து செலவு செய்யப்படுகிறது.
4. தேர்வுக்கான வினாத்தாள் எடுப்பதற்கும், விடைத்தாள்கள் திருத்துவதற்கும் உரிய ஆசிரியர்களுக்கு மதிப்பூதியம் தருதல்.
5. மேலும் தேர்வு நடைபெறும் சமயத்தில் ஒப்புவித்தல் போட்டிக்காக செல்லும் ஆசிரியர்களுககு போக்குவரத்து செலவு வழங்குதல்.
6. கொரியர் மூலம் அனைத்து தபால்களையும், பார்சல்களையும் அனுப்புவதற்கான அஞ்சல் செலவு.
7. ஒவ்வொரு மாணவருக்கும் தரமான சான்றிதழ்கள் வழங்க ஆகும் செலவு.
8. ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும், தேர்ந்தெடுத்த பள்ளிகளுக்கும், மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கும் செலவு.

இன்னும் இதர செலவுகள் அனைத்தும் இந்தக் குறைந்த பட்சத் தேர்வு கட்டணத்தில்தான் நடைபெறுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

---


தொடர்புக்கு :

**0452 - 2386238, 94438 80087**

திருக்குறள் தேர்வகம் :

**அ.கி.செ.திருமாவளவன்,** தேர்வுச் செயலர்,

55, டி.எஸ்.பி.நகர், 2வது தெரு, புறவழிச்சாலை, மதுரை - 625 010.


---

**அனைத்துப் பள்ளிகளும், கல்லூரிகளும் கூடிய வரை தேர்வுக் கட்டணத்தை வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தவும்.**

**நேரடியாக வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் விபரம்**

**IFSC Code : IOBA0000314 A/c. No. : 031401000028019**

**Name : S. THIRUMAVALAVAN**

**Bank: INDIAN OVERSEAS BANK,**

**(North Vadambokki Street, Madurai. Cell No. 94433 80087**

கல்லூரி / பள்ளி எண்

# திருக்குறள் பேரவை

ஆண்டு வகுப்பு

55, டி.எஸ்.பி. நகர் 2வது தெரு, புறவழிச்சாலை, மதுரை - 10.

**[இரண்டு படிவங்கள் தமிழில் அனுப்புதல் வேண்டும்]**

மின்னஞ்சல் முகவரி : maduraithirukkuralperavai@gmail.com

## மாணவர் பட்டியல்

தொலைபேசி : 0452 - 2386238
அலைபேசி : 94433 80087

பள்ளி / கல்லூரி பெயர் ..........................................................................................

வகுப்பு ..........................................................................................

முகவரி ..........................................................................................

| வ. எண். | மாணவர் பெயர் | தேர்வு எண் (நிரப்புதல் வேண்டாம்) |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

| வ. எண். | மாணவர் பெயர் | தேர்வு எண் (நிரப்புதல் வேண்டாம்) |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |